# இயல் 2

## சடங்குகள் ஒரு பார்வை

சமூக வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளாகச் சடங்குகள் விளங்குகின்றன. இச்சடங்குகளால் மனிதர்கள் சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளனர். ஒரு செயல் நன்மை விளைவிக்கின்றது என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கமாக மாறுகின்றது. காலப்போக்கில் அறிவியல், கல்வி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்போது அது சடங்காக மட்டும் நிற்கின்றது. சடங்குகளைப் புறக்கணிப்பது தாய், தந்தையர் அல்லது முன்னோர்களை அவமதிப்பது போலாகும் என்ற கருத்து நடைமுறையில் இருந்து வருகின்றது. முன்னோர் வழக்கங்களை மதிக்க வேண்டும் என்பதைப் பவணந்தி முனிவரும்,

முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழியும்

பொன்னே போற் போற்றுவம் 1

என்று குறிப்பிடுகின்றார். சடங்குகள் எல்லா நாட்டினராலும் குலத்தினராலும் கடைப்பிடிக்கப்பட்டாலும் ஒவ்வொரு குலத்தாரும் தம் குலத்திற்கென்று ஒரு வரையறை உண்டாக்கி அவற்றைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

இச்சடங்குகள் குறித்து, “உலகில் தாம் வாழும் சூழ்நிலைகளுக்கேற்ப ஒவ்வொரு பகுதிகளில் வாழும் மக்களும் சில பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் கொண்டுள்ளனர். ஒரே பகுதியில் வெவ்வேறு இனக்குழுக்களைச் சார்ந்த மக்கள் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைக் காண்கிறோம். அவ்வாறு வெவ்வேறு சமுதாய மக்கள் சேர்ந்து நெடுங்காலம் வாழ்ந்து வரும்போது அப்பகுதி மக்களின் நம்பிக்கைகளிலும் சடங்குகளிலும் சில பொதுமைக் கூறுகள் ஏற்படுவதுண்டு. இருப்பினும் சமுதாயம் சார்ந்த சில நம்பிக்கைகளை அவர்கள் தனித்தன்மையோடு பின்பற்றி வருவதையும் அறிய முடிகிறது. சமூகத்தோடு பின்னிப் பிணைந்துள்ள மக்களின் நம்பிக்கைகளும் அதைச் சார்ந்த சடங்குகள் பலவும் ஏதேனும் ஒரு வடிவத்தில் மக்களால் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றன” 2 என்கிறார் த. ஆதித்தன்

“தனி நபருக்கு உண்டாகும் நெருக்கடியான காலங்கள் என்பவை பிறப்பு, பூப்புக்காலம், திருமணம், கிழப்பருவம் முதலியன. கிழப்பருவம் என்பது வயது முதிர்ந்த பருவமாகும். இந்தக் காலங்களில் உண்டாகும் தீமைகளை அவற்றிற்குரிய

சடங்குகளைச் செய்து நீக்கிக் கொள்வர்.” 3 இவ்வாறு ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் சடங்குகள் சிறப்பிடம் பெறுவதால் இதனைப் பற்றி ஆராய வேண்டும் என்ற எண்ணம் உண்டான காரணத்தினால் விளவங்கோடு வட்டார மக்களின் வாழ்வில் முக்கிய இடம்பெறும் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு ஆகியவற்றில் இடம்பெறும் சடங்குகளையும், சமயச் சடங்குகளையும் ஆராய்வதென்று முடிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சடங்குகள் மனிதருடைய வாழ்வில் முக்கியப் பங்கை வகிக்கின்றன என்பதை அனுபவமாக அன்றாட வாழ்வில் காண்கிறோம். அந்தச் சடங்குகள் மனிதருடைய அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் தொட்டுச் செல்வதை உணர்கிறோம். இவ்வாறு செயல்படும் அந்தச் சடங்குகளின் “பல்வேறு பாரிணாமங்களைப் புரிந்து கொள்ளும் போதுதான் அவை விட்டுச் செல்லும் தாக்கத்தை ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும்”. 4 “சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை” 5 என்று க. காந்தி கூறுகின்றார்.

சடங்குகள் நம்பிக்கையின் வளர்ச்சியாகவே விளங்குகின்றன. எக்காரியத்தைச் செய்தாலும் அவற்றை இன்னின்ன நிகழ்ச்சிகளைக் கொண்டு செய்வதும், அவற்றைச் செய்யவில்லையென்றால் தீங்கு நேரும் வாழ்வு நலமாக அமையாது என்றும் கருதுவதினால் சில செயல்களைக் காலம் காலமாகச் செய்து வருகின்றனர். இவ்வாறு செய்து வரும் செயல்களையே சடங்குகள் என்று வழங்கலாம்.

ஒரு மங்கல நிகழ்ச்சியோ, சிறப்பு நிகழ்ச்சியோ அதற்குரிய காரண காரியம் அறிய முடியாத நிலையில் ஒரு சங்கிலித் தொடர் போன்று நிகழ்ந்து வரும் செய்முறை நிகழ்ச்சியைச் சடங்கு என்று கூறலாம்.

**சடங்குகளின் இரு வகைகள்**

மனிதன் ஒரு சடங்குப் பிராணி. ஏனென்றால் இயற்கை அமைப்போடும் சமூக அமைப்போடும் வாழ்வதற்காக அவன் அமைத்துக் கொண்ட வழிமுறைகளே சடங்குகளும் தொன்மங்களும் ஆகும். நுண்மையான எண்ணங்களையும் ஏக்கங்களையும் பொருண்மை வடிவில் வெளிப்படுத்த சடங்குகள் அவசியம். இந்தச் சடங்குகளிலிருந்து மனிதரை ஒருபோதும் பிரிக்க முடியாது. இந்தச் “சடங்குகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று சமயச் சடங்கு மற்றொன்று வாழ்க்கை வட்டச் சடங்குகள்” 6

**சமயச் சடங்குகள்**

“போரின்பத்தையடைய அறிவுடையோர் கொண்டொழுகும் வழிகளே மதங்களாகும்.” 7 மக்களின் சமூக, சமய, அரசியல், பொருளாதாரப் பண்பாட்டு வரலாறுகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்கின்றன. கடவுளிடத்து ஏற்பட்ட அச்சமும் நன்றிக் கடப்பாடும் நாட்டுப்புறச் சமயத்தின் அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

சடங்குகளில் சமயம் சார்ந்த சடங்குகள் குறிப்பிடத்தக்கனவாகக் காணப்படுகின்றன. எந்தவொரு மாநிலத்தை, மாவட்டத்தை, வட்டத்தை, கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் பல்வேறு சமய மக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் உள்ளத்தால் ஒற்றுமையாகக் காணப்பட்டாலும் சடங்குகளால் வேறுபட்டுக் காணப்படுகிறார்கள். இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் பாரம்பாரியமாகச் சடங்குகளைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர். கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள் அவர்களின் புனித நூலான விவிலியத்தில் காணப்படும் கருத்துகள் சிலவற்றைச் சடங்காகக் கடைப்பிடிக்கின்றனர். இஸ்லாமியர் அவர்களது புனித நூலான திருக்குரானில் உள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுச் சடங்குகள் செய்கின்றனர்.

**வாழ்க்கை வட்டச் சடங்குகள்**

“மனிதன் பிறந்ததிலிருந்து சாகின்றவரை ஒரு பருவத்திலிருந்து இன்னொரு பருவத்திற்கு மாறும்போது ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு சடங்கு நிகழ்கிறது. “8

கிராம மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் அனைத்துச் செயல்களும் ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை சில செயல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். அவ்வாறு தொடர்ந்து செய்து வரும் செயல்களே சடங்குகளாக நிலைக்கின்றன. அவ்வாறு வாழ்க்கைச் சக்கரத்தில் மக்களால் செய்யப்படும் சடங்குகளைக் குறித்துப் பலர் தங்களது கருத்துக்களைத் திறம்பட எடுத்துக் கூறியுள்ளனர்.

மக்கள் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் செயல்படுத்தும்போது அவை சடங்குகளாகின்றன. எண்ணியது நிறைவேறவும் வாழ்வு சிறப்புறவும் அச்சத்தாலும், ஆர்வத்தாலும் சடங்குகள் நடத்தப்படுகின்றன. ஏதாவதொன்றின் காரணமாகச் செய்யப்பட்டு, நம்பிக்கையை நிலைநாட்டி, கால இடச் சூழ்நிலை அமைவுகளுக்கேற்ப உருப்பெற்று விளங்கும் மரபுகளே சடங்குகளாகின்றன. பின்னர் இவை மனிதனது பிறப்பு, வளர்ப்பு, திருமணம், தொழில், இறப்புப் போன்ற அனைத்தோடும் தொடர்புற்று வளர்ந்து வாழ்ந்து வருகின்றன. சுருக்கமாகக் கூற வேண்டுமானால் ஏதோ ஒரு

நம்பிக்கையின் அடிப்படையில் வழிவழியாக மரபுரீதியாக வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் செய்யப்படும் தொடர் செயல்களே சடங்குகள் என்று கொள்ளலாம்.

இச்சடங்குகள் பிறப்பு முதல் இறப்புவரை எல்லாக் காலக் கட்டங்களிலும் நடைபெறுகின்றன. எனவே அவற்றின் அடிப்படையில் வாழ்க்கை வட்டச் சடங்குகள் பின்வருமாறு ஏழு பிரிவாகப் பிரித்துக் கொள்ளப்படுகிறது.

1. பிறப்புச் சடங்குகள்
2. காதணி விழாத் தொடர்பான சடங்குகள்
3. பூப்புனித நீராட்டுத் தொடர்பான சடங்குகள்
4. திருமணம் தொடர்பான சடங்குகள்
5. வளைகாப்புத் தொடர்பான சடங்குகள்
6. இறப்புத் தொடர்பான சடங்குகள்
7. ஏனைய சடங்குகள்

**1. பிறப்புச் சடங்கு**

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு 9

என்று திருவள்ளுவர் இல்லறம் என்னும் நல்லறத்திற்கு நன்கலனாக விளங்குவது மக்கள் என்று குழந்தைப் பேற்றின் சிறப்பினைக் கூறுகின்றார். மறைமலையடிகளும் “இல்வாழ்க்கையின் சிறந்த பயனாக நன்மக்களைப் பெற்று அவரைப் பல நலங்களும் வாய்த்தவராக்குதல்”10 என்று கூறுகின்றார். குழந்தைச் செல்வத்தின் முக்கியத்துவத்தாலும், நன்மக்கள் பேற்றில் இறையருளின் இன்றியமையாமையாலும், குழந்தைப் பேற்றின் பின்னும் பல்வேறு சடங்குகள் நடைபெறுகின்றன.

**கருநிலைச் சடங்குகள்**

ஒரு பெண் கருவுற்றதிலிருந்து பிள்ளைப் பேறு வரை நடைபெறுகின்ற சடங்குகள் கருநிலைச் சடங்குகள் எனப்படும். இவை ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஏற்ற வண்ணம் ஒவ்வொரு விதமாய் நடைபெறுகின்றன.

“தமிழகத்தில் நாட்டுப்புறங்களில் குழந்தை பிறந்த பின்னரோ அல்லது பிறப்பதற்கு முன்னரோ தாய்க்குப் பச்சை குத்தும் சடங்கு நடைபெறுகிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்குப் பச்சை குத்தினால் அவளுடைய அச்சம் நீங்கிச் சுகப்பிரசவம் நடக்குமென நம்புகின்றனர். "11 "முதல் குழந்தை பிறப்பது எந்த வீட்டிலும், குடும்பத்திலும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. இது மகிழ்ச்சி நிறைந்தது. செல்வம் நிறைந்தது. மணமாகிப் பல்லாண்டாகியும் குழந்தை பெறாத குடும்பத்தில், குழந்தை பிறந்து விட்டால் அங்கு ஏற்படும் இன்பமும் களிப்பும் எல்லையற்றதாக இருக்கும்." 12

இறைவன் அருளால் குழந்தை பிறக்கிறது் குழந்தை பிறப்பதும் பிறக்காததும் கடவுள் செயல் என்று நம்புகின்ற கிராம மக்கள் குழந்தை பிறக்கின்ற போதும், குழந்தை பிறந்த பிறகும் அதற்கெனச் சில சடங்குகளைச் செய்கின்றனர். பிரசவ வேதனையில் துடிக்கும் ஒரு பெண்ணைத் தனி அறையில் இருக்க வைத்து மருத்துவச்சியை அழைத்து வந்து சீரகத்தால் செய்யப்பட்ட "கசாயம்" வைத்துக் கொடுக்கின்றனர். குழந்தை பிறந்தவுடன் அழவில்லை என்றால் குழந்தையைக் கிள்ளி அழ வைப்பார்கள். முதலிரண்டு குழந்தைகள் பிறந்து, இறந்து போயிருந்தால் மூன்றாவது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் மூக்குக் குத்துவார்கள்.

"மணமாகி வெகு நாள் கழித்துக் குழந்தை பிறந்திருந்தால் குப்பையில் போட்டுப் புரட்டிக் குப்பன், குப்பம்மாள் என்றும் பெயர் வைப்பார்கள்."13 குழந்தை பிறக்கும் போது கொடி சுற்றிப் பிறந்தால் குடும்பத்திற்குக் கேடு வரும் எனவும் மாலை சுற்றிப் பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது எனவும் கிராமப்புற மக்கள் மிகுதியும் நம்புகின்றனர். ஆகவே, அவ்வாறு பிறக்கும் குழந்தையின் முகத்தை எண்ணெயில் காட்டுவர். அதில் தொரியும் நிழலில் குழந்தை முகத்தைப் பார்த்தால் அந்தக் குற்றம் நீங்கும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளனர். "ஆண் குழந்தை அமாவாசை மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பிறக்கக்கூடாது என்றும் அவ்வாறு பிறந்தால் தீய குணம் கொண்டிருக்கும் என்பதும் நாட்டுப்புற நம்பிக்கை."14 மேலும் "தாய் மாமனுக்குத் தீங்கு நேராமல் இருப்பதற்காக, மூன்றாம் நாள் திரைகட்டி விட்டு மூன்று முறை தாயின் தாலிக் கயிற்றில் குழந்தையை நுழைத்து எடுப்பார்கள். சேவலைக் கொண்டு குழந்தையை மும்முறை சுற்றிப் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சியிடம் கொடுத்து விடுவார்கள்." 15

கிரகண நாட்களில் கத்தாரி, பூசணி போன்ற காய்களை அரியமாட்டார்கள். அரிந்தால் குழந்தை பின்னப்படும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது. கருவுற்ற பெண்கள் தையல் பணியில் ஈடுபடக்கூடாது என்பர். "முதல் குழந்தை

பெண் குழந்தையாகப் பிறக்க வேண்டும். அப்போதுதான் குடும்பம் தழைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது. கருவுற்ற பெண்கள் வலது கையை ஊன்றி எழுந்தால் ஆண் குழந்தை பிறக்கும் எனவும் நம்புகின்றனர்.”16 நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் மருந்துப் பொருள்களைக் கொண்டு வந்து அரைத்து “செலவு குழம்பு” செய்து தாய்க்குக் கொடுப்பார்கள். அதே போன்று “காரம்” எனப்படும் மருந்தைக் குழந்தைக்கு ஊற்றுவார்கள்.

கருத்தாரித்திருக்கும் தாயின் வயிறு எட்டு ஒன்பது மாதங்களில் பொரிதாகப் பரந்து இருந்தால் பெண்குழந்தையும் சிறிதாக ஒடுங்கி இருந்தால் ஆண் குழந்தையும் பிறக்கும் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதுமட்டுமல்ல மேல் வயிறாக இருந்தால் ஆண் குழந்தையும் அடி வயிறாக இருந்தால் பெண் குழந்தையும் பிறக்கும் என்றும் நம்புகின்றனர். குழந்தை பிறந்தவுடன் தங்கத்தைப் பாலாடையில் உரசிக் கொடுத்தால் குழந்தை வளரும்போது வெள்ளை நிறத்துடன் பளபளப்பாக இருக்கும் என்றும் நம்புகின்றனர். முதல் குழந்தையோடு புகுந்த வீடு வரும் தாயைப் பார்க்க வரும் அக்கம் பக்கத்தார்களுக்கு வெற்றிலை, பாக்கு, பலகாரம் கொடுத்தல் வழக்கமாக உள்ளது. பிறகு பெரும்பாலும் பொரியோர்களின் பெயர்களையோ தெய்வங்களின் பெயர்களையோ வைப்பது கிராம மக்களின் வழக்கமாக உள்ளது.

இவ்வாறு பிறப்புத் தொடர்பான சடங்குகளைப் பிறக்கும் குழந்தை, தாய், உறவினர் ஆகியோருக்குத் தீங்கு நேராமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும், வருகிற தீங்கிலிருந்து காத்துக் கொள்ளவும் செய்வதாகக் கிராம மக்கள் கூறுகின்றனர்.

### தொட்டிலில் இடுதல்

குழந்தையைத் தொட்டிலிலிடும் சடங்கு குறிக்கத்தக்கது. குழந்தை பிறந்து இருபத்தொரு நாட்கள் கழித்துச் சில சடங்குகளைச் செய்வர். பிறகு தொட்டிலிலிடுவர். பெயாரினை முடிவுசெய்து பெயரை அரிசியில் எழுதிக் குழந்தையின் காதில் மூன்று முறை கூறிச் சங்கில் தேனைத் தொட்டு குழந்தையின் வாயில் வைப்பர். குழந்தைகளுக்குப் பெயாரிடும்போது முன்னோர்களின் பெயர்களை இடும் வழக்கம் உள்ளது. குடும்பத்தில் இறந்த முன்னோர்களே மீண்டும் பிறந்து வந்திருப்பதாக மக்கள் நம்புகின்றனர். குலதெய்வங்களின் பெயர்கள் மற்றும் பிற தெய்வங்களின் பெயர்களை இடும் வழக்கம் உள்ளது. குழந்தைகள் பிறந்து இறக்குமேயானால் பிச்சை என்று பெயாரிடும் வழக்கம் உள்ளது. தெய்வத்தின் பிச்சையால் கிடைத்த குழந்தை என்றால் எமன் நெருங்கமாட்டான் எனவும், மேலும்

அதற்கு மூக்குக் குத்திவிட்டால் தீங்கு விளைவிக்கமாட்டான் என்றும் மக்கள் நம்புகின்றனர். “தொடர்ந்து பெண் குழந்தைகள் பிறந்தால் “போதும்பெண்ணு” என்று பெயாரிட்டால் அடுத்து ஆண்குழந்தை பிறக்கும் எனவும் மக்கள் நம்பிக்கை கொண்டு, தொட்டிலிலிடும் சடங்கன்று பெயர் சூட்டுகின்றனர். “17

**கண்ணேறு கழித்தல்**

‘கல்லடிபட்டாலும் கண் அடிபடக்கூடாது“ என்பது நாட்டுப்புறப் பழமொழி. தாலாட்டுப் பாடல்களில் கண்ணேறு கழித்தல் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. “சுண்ணாம்பு, மஞ்சள், வேப்ப இலை ஆகியவற்றுடன் வெற்றிலையைக் கிள்ளிப்போடுவர். அதில் சூடத்தைக் கொளுத்திக் கண்ணேறு கழிப்பர். “ 18 பொறாமைக்கண் கொண்டு பார்த்தால் குழந்தைகள் மற்றும் பொரியவர்களுக்குக் கேடு நிகழும் என்பது நாட்டுப்புற மக்களின் வலுவான நம்பிக்கைகளில் ஒன்று. இந்த நம்பிக்கை காலம் காலமாகத் தொடர்கின்றது. கண்ணேறு படுமானால் பலவிதமான தீங்குகள் தனி மனிதனுக்கும் குடும்பத்திற்கும், தொழில்களுக்கும் ஏற்படும் என்று மக்கள் நம்புகின்றனர்.

குழந்தை காரணமின்றி அழுதாலோ, உறக்கம் இன்றி இருந்தாலோ, உண்டதை வாந்தி எடுத்தாலோ, கக்கினாலோ, காய்ச்சல் ஏற்பட்டாலோ கண்ணேறு பட்டதாக மக்கள் கருதுகின்றனர். உடனே கண்ணேறு கழிக்கும் சடங்கினைச் செய்வர்.

குழந்தைக்குக் கண்ணேறு வராமல் இருப்பதற்காக மூன்று வீட்டுக் கூரைகளைக் கொண்டுவந்து அவற்றில் தெருவிலுள்ள மண், மிளகாய், உப்பு வைத்துத் திருஷ்டி சுற்றி அடுப்பில் எறிவார்கள். மிளகாய் நெடிவராமல் இருந்தால் அதிக கண்ணேறு என்று கூறுவார்கள். இதே போன்று கற்பூரம், மஞ்சள் நீர் இவற்றால் கண்ணேறு கழிப்பதும் உண்டு. உடைந்த கொட்டாங்குச்சியால் கண்ணேறு கழிப்பதும் உண்டு.

**ஓமச்செலவு**

குழந்தை பெற்ற பெண்ணுக்கு முதலில் சில நாட்கள் பருப்பு, சாம்பார் போன்ற கறிகள் சாப்பிடக் கொடுப்பது இல்லை. அவர்களுக்கு ‘ஓமச் செலவு“ என்று சொல்லப்படும் பத்தியக்குழம்புடன் அரிசிச் சோற்றை உணவாகக் கொடுப்பர்.

இப்பத்தியக் குழம்பினைப் ' புள்ளத்தாச்சி செலவு" என்றும் கூறுகின்றனர். குழந்தை பிறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே கடையிலிருந்து, இம்மருந்தினை வாங்குவர். குழந்தை பிறந்த நாளிலிருந்து ஒன்பது நாள் வரை இப்பத்திய உணவினையே குழந்தையைப் பெற்ற தாய்க்குக் கொடுக்கின்றனர்.

**குழந்தைக்குப் பெயாரிடல்**

"குழந்தைக்குப் பாட்டன் பெயரை வைத்தல் தொன்று தொட்டு தமிழாரிடையே இருந்து வரும் வழக்கமாகும்." 19 குழந்தைக்கு இந்த வயதில் அல்லது இந்த மாதத்தில் பெயாரிட வேண்டும் என்ற நியதி விளவங்கோடு வட்டார மக்களிடம் காணப்படுவதில்லை. அவர்கள் வசதிக்கேற்ப எந்த நாளிலும் பெயாரிடுவார்கள். தற்காலத்தில் ஏற்பட்டுள்ள நாகாரிக வளர்ச்சியினால் பெயாரிடும் முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பழமையான பெயர்கள் அருகி வருகின்றன. எளிமையும் கவர்ச்சியும் மிகுந்த பெயர்களையே தற்காலத்தில் சூட்டுகின்றனர்.

**குழந்தை இல்லாதவர்களின் நிலை**

சமுதாயம் குழந்தைப் பேறு பெற்றவர்களை மதிக்கிறது. குழந்தைப் பேறு இல்லாதவர்களை இழிவாக 'மலடி" என்று வசைபாடுகிறது. இதனை நரேந்திரநாத் பட்டாச்சாரியா "மலடி விளை நிலத்திற்குத் தீங்கானவள். மலடி விளை நிலத்தைப் பாழ் நிலமாக்கிடுவாள்" 20 என்று கூறுவதாகக் கிருஷ்ணசாமி குறிப்பிடுகிறார்.

விளவங்கோடு வட்டார இந்து சமுதாய மக்கள் குழந்தை வரம் வேண்டிப் பழனி, திருப்பதி போன்ற கோவில்களுக்குச் செல்கின்றனர். "உடல் நலம் பெறவும், ஒரு குறிப்பிட்ட துன்பத்திலிருந்து விடுபடவும், நேர்ச்சை மேற்கொள்ளப்படுகிறது. திருத்தல யாத்திரைகள் பெரும்பாலும் நன்றி கூறும் வண்ணமே அமைந்துள்ளன. இத்தகைய யாத்திரைகளை முடித்தபின், தங்கள் குடும்பங்களுக்குத் தாங்கள் வணங்கும் குல தெய்வத்தால் நல்லவையே நேரும் என்றும் நம்பப்படுகிறது." 21 கோவில்களில் வேண்டியபின்பு குழந்தை பிறந்தது என்றால் அந்தக் கோவில்களில் 'நேர்ச்சை" செய்ததுபோலக் குழந்தையின் எடைக்கு எடை நாணயத்தைக் காணிக்கையாகச் சிலர் செலுத்துகின்றனர். சிலர் குழந்தை வரம் கிடைத்தால் நான்கு ஊர்களில் பிச்சை எடுத்து அதனைக் கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டுகின்றனர். வேண்டியபடி பிச்சை எடுத்துக் காணிக்கை செலுத்துகின்றனர். சிலர் மொட்டை அடித்தும் கொள்கின்றனர். இவற்றின் மூலம் பெற்றோர்களின் நன்றி உணர்வினையும் பக்தி உணர்வினையும் அறிய முடிகிறது.

## 2. காதணி விழாத் தொடர்பான சடங்குகள்

“அந்தக் காலத்தில் சம்பிரதாயமாக, பெண் குழந்தைக்கு மட்டுமல்லாமல் ஆண் குழந்தைக்கும் காது குத்துவது கட்டாயமாக இருந்தது. இது மதச் சம்பிரதாயம் மட்டுமல்ல, விஞ்ஞான £தியாக நற்பயன் விளைவிக்கக் கூடியதும் கூட. காதில் அணிகலன் போட்டுக் காது தொங்கலாக இருந்தால் கண்பார்வை தெளிவுபெறும் என்பது விஞ்ஞானப் பூர்வமான கருத்து.” 22 கண்ணேறு பட்டுவிடும் என்பதாலும் காது குத்துகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். காது குத்துதல் ஆசியாவில் மட்டுமல்லாமல் எகிப்து முதலிய நாடுகளிலும் காணப்படுகிறது. விளவங்கோடு வட்டார மக்கள் மூன்று முதல் ஐந்து வயதிற்குள் காதுகுத்துகின்றனர். பெண் குழந்தைகளுக்கு மட்டுமே காதுகுத்துகின்றனர். பெரும்பாலும் வீட்டில் வைத்தே காது குத்துகின்றனர். சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குக் குலதெய்வக் கோவிலில் வைத்தோ அல்லது பழனி, திருப்பதி கோவிலில் வைத்தோ காது குத்துகின்றனர்.

## 3. பூப்புச் சடங்கு

விளவங்கோடு வட்டார மக்கள் பெண்கள் பூப்பெய்துவதை ‘வயதுக்கு வந்துட்டா“ என்று கூறுகின்றனர். ஒரு பெண் பூப்புற்றதும் உறவினர்களுக்குப் பூப்புற்ற செய்தியை அறிவிக்கின்றனர். பூப்புற்ற பெண்கள் தினமும் குளிப்பர். அவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவு வகைகள் கொடுக்கப்படுகின்றன. உறவினர்கள் அவர்களுக்குப் பலகாரம் கொண்டு வந்து கொடுப்பர். பூப்புற்ற பெண் பொட்டு, பூ வைப்பதில்லை. பூப்புற்ற பெண்ணுக்கு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டுவர். இதனை ‘மாஞ்சா வைத்தல்“ என்பர்.

## 4. திருமணச் சடங்குகள்

தொல்காப்பியப் பொருளதிகாரக் கற்பியலில் திருமணம் பற்றிய செய்தி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
>
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
>
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே, 23

கற்பு என்பது திருமணச்சடங்கு. உலகறிய நடத்தி வைக்கப்படுவது ஆகும். கற்பு என்று திருமணம் குறிக்கப்படுகிறது. அது கரணமொடு சடங்குகளுடன்

நடத்தப்படும். தலைவியைக் கொள்ளுதற்குரிய தன்மையுடைய தலைவன், கொடுத்தற்குரிய உரிமையுடைய தன்மையினர் கொடுப்ப, மணம் செய்து கொள்வதாகும்.

கரணம் - திருமணச் சடங்கு. கொடைக்குரியோர் - கொடுத்தற்குரிய தலைவியின் பெற்றோர். கொளற் குரி மரபு - தலைவன் பாரிசம் தந்து, மங்கல நாண் பூட்டி மணத்தல் ஆகும். உடன் போக்கிலும் மணம் செய்தல் உண்டு. தலைவன் மூலம் மணந்து கொள்ளும் சடங்கு நிகழும். இதனைத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்து உடன்போகிய காலையான. 24

தலைவியை மணம் செய்து கொடுத்தற்குரியவர்கள் இல்லாமலும், காதலர் உடன்போகிய காலத்தில், மணச்சடங்குகள் உண்டு. திருமணம் நடத்தப்பெறும்.

மக்களிடையே பொய்யும் ஏமாற்றும் புகுந்தபின் உலகறியும் சடங்கு தோன்றியது. இதனைத் தொல்காப்பியர்,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப. 25

என்று குறிப்பிடுகின்றார். களவுக் காதலில் ‘இவளை அறியேன்“ எனப் பொய் கூறலும் வேற்றுவரைவு, இடையில் கைவிடல் முதலான வழுவும் ஏற்பட்ட பிறகு, தந்தை தமையன்மார் அகவை முதிர்ந்த சான்றோர் ‘கரணம்“ என நாடு அறியும்படியான மணச்சடங்குகளை வகுத்தனர். மணமானவளை மணம் ஆகாதவளோ என எண்ணி, ஓர் ஆடவன் காமத்துடன் பார்ப்பதை, தாலி முதலான அடையாளம் தடுக்கும். இன்றேல் மணமானவளைக் காதலிக்கவும் மணம் பேசவுமான பொய்யும் வழுவும் தோன்றும். கரணமும் அதன்வழி மணமானவரை ஆகாதவாரினின்றும் வேறுபடுத்தும் அடையாளங்களும் சமுதாயப் பொரியோர்களால் வகுக்கப்பட்டன என்பார் வ. சுப. மாணிக்கம்.

விளவங்கோடு வட்டாரத்தில் திருமணங்கள் வளர்பிறையில்தான் அதிக அளவில் நடைபெறுகின்றன. காலை ஒன்பது அல்லது பத்து மணிக்குத்தான் திருமணங்கள் நடைபெறும். திங்கட்கிழமை திருமணம் நடைபெற்றால் 10.30 மணிக்கு மேல் நடைபெறும்.

**இளமை மணம்**

விளவங்கோடு வட்டாரத்தில் சிறுவர் சிறுமிகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் ‘இளமை மணம்“ நடைமுறையில் இல்லை. புரிந்து கொள்ளும் அறிவு வந்த பின்னர்த் திருமணம் செய்து வைக்கின்றனர். பட்டப்படிப்பு முடித்தபின்னர் தான் திருமணம் செய்து வைக்கின்றனர்.

**உடன்போக்குத் திருமணம்**

விளவங்கோடு வட்டத்தில் வாழும் ஒரு பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் காதலிக்கும் பொழுது பெற்றோர் முறைப்படி திருமணம் செய்ய சம்மதிக்காதபோது உடன்போக்குத் திருமணம் நடைபெறுகிறது. உடன்போக்கு சமூக அங்கீகாரம் பெற்றதாகவே கருதப்படுகிறது. சங்க இலக்கியங்களில் பாலைத் திணைப் பாடல்களில் உடன்போக்குப் பற்றிய செய்திகளைக் காணலாம். பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணங்கள் பெரும்பாலும் சொத்தின் அடிப்படையில் அமைகின்றன. ஓர் ஆண்மகன் தன்னால் காதலிக்கப்பட்ட ஒரு பெண்மகளையும், ஒரு பெண்மகள் தன்னால் காதலிக்கப்பட்ட ஓர் ஆண்மகனையும் மணந்து வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என்பதே பண்டைத் தமிழ் மக்களின் கொள்கையாய் இருந்தது.

**கலப்பு மணம்**

கலப்பு மணம் காதல் மணத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. இரு வேறு சாதியினாரிடையே கலப்பு மணம் நிகழும். கலப்பு மணம் நிகழும்போது சமுதாயத்தில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. கலப்புத் திருமணம் செய்தால் அவர்களை ஊரை விட்டே நீக்கி விடுகின்றனர். அவர்களுடைய நல்லது கெட்டதுகளில் ஊரார் கலந்து கொள்வதில்லை. ஊராரின் நல்லது கெட்டதுகளில் அவர்கள் கலந்து கொள்ள அனுமதிப்பதும் இல்லை. கலப்பு மணம் புரிவதைத் தீட்டாகவே கருதுகின்றனர்.

**கடத்தல் மணம்**

“பெண்ணுடைய சம்மதமோ அல்லது பெண்ணின் பெற்றோர் சம்மதமோ இல்லாமல் ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டுபோய்த் திருமணம் செய்வதைக் ‘கடத்தல் மணம்“ என்பர்.” 26 விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் இளைஞர்கள் சிலர் தனக்குப் பிடித்தமான பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்குப் பெண்ணின் பெற்றோரோ அல்லது மணப்பெண்ணோ மறுத்துவிட்டால் திடீரென்று தன்

நண்பர்களுடன் வந்து பெண்ணைத் தூக்கிக் கொண்டுபோய், திருமணம் செய்கின்றனர். பெரும்பாலும் கடத்தல் திருமணம் நடைபெறுவதில்லை.

**மறுமணம்**

விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் மக்கள், கணவனை இழந்து விட்டால் அல்லது மனைவியை இழந்து விட்டால் மறுமணம் செய்கின்றனர். ஒரு சில பெண்கள் கணவன் இறந்து விட்டால் வேறு திருமணம் செய்யாமல் கூலி வேலைக்காவது சென்று குழந்தைகளை வளர்க்கின்றனர். விவாகரத்தான இளம் பெண்கள் சிலரும் மறுமணம் புரிகின்றனர்.

**மணமுறிவு (விவாகரத்து)**

விளவங்கோடு வட்டார மக்களிடம் அதிக அளவில் விவாகரத்துக் காணப்படுவதில்லை. விவாகரத்து நீதிமன்றம் வரை செல்லாமல் பெரும்பாலும் மகளிர் காவல் துறை மூலம் நடைபெறுகிறது. விவாகரத்துக்கு முக்கியக் காரணம் கணவன் குடும்பத்தாராவர். கணவன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மணப்பெண்ணை அடிமை போல் நடத்துவார்கள். இதனைத் தாங்கிக் கொள்ள இயலாத மணப்பெண் தன்னுடைய பெற்றோரிடம் கூற, மணப்பெண்ணின் பெற்றோர் தங்கள் மகள் கஷ்டப்படக் கூடாது என்று தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர். வரதட்சணை காரணமாக விவாகரத்து நடைபெறுவதும் உண்டு. கருத்து வேறுபாடு காரணமாகவும் விவாகரத்து நடைபெறுகிறது.

**5. வளைகாப்புச் சடங்கு**

ஒரு பெண் திருமணம் முடிந்து கருவுற்ற நிலையில் ஐந்தாம் மாதம் அல்லது ஏழாம் மாதத்தில் வளைகாப்புச் சடங்கு நடைபெறுகிறது. வளைகாப்புச் சடங்கு நிகழ்த்தும்போது கருவுற்ற பெண்ணின் இரு கைகள் நிறைய கண்ணாடி வளையல் அணிவிக்கப்படுகிறது. பொரியவர்கள் கண்ணாடி வளையலை அணிவிக்கின்றனர். வளையல் சத்தம் கேட்டால் தாயின் வயிற்றிலிருக்கும் குழந்தை மகிழ்ச்சியடையும் என்பது மக்களின் நம்பிக்கை. வளைகாப்புச் சடங்கின்போது உற்றார் உறவினர் அனைவருக்கும் விருந்து பாரிமாறப்படுகிறது.

**6. இறப்புச் சடங்கு**

வாழ்க்கையின் இறுதி நிகழ்ச்சி மரணம் ஆகும். இது இயற்கையாகவோ, செயற்கையாகவோ நிகழும். இறந்தோரை இறப்போரினின்றுப் பிரித்து, முன்னால் இறந்து போன மூதாதையருடன் இணைப்பதே ஈமச்சடங்குகளின் நோக்கமாகும்.

விளவங்கோடு வட்டத்தில் ஒருவர் இறந்து விட்டால் அவரை வீட்டினுள் கட்டிலிலோ, மேசையிலோ படுக்க வைப்பர். இறந்தவாரின் உடலில் ஈ அண்டாமல் இருக்க இறந்தவாரின் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் பத்தி, மெழுகுவர்த்தி கொளுத்தி வைப்பர். உறவினர்கள் வருத்த மிகுதியினால் இறந்தவரைச் சூழ்ந்து அமர்ந்து ஒப்பாரி வைக்கின்றனர். இறந்தவாரின் உடலைக் குளிப்பாட்டி மையப்பெட்டியில் வைக்கின்றனர். பெரும்பாலும் கல்லறையில் அடக்கம் செய்கின்றனர். விளவங்கோடு வட்டத்தில் ஒரு சில சாதியைச் சார்ந்தவர்கள் மட்டும் சுடுகாட்டில் பிணத்தை எரிக்கின்றனர். ஒன்பதாம் நாள் அல்லது பதினொன்றாம் நாள் அல்லது பதினாறாம் நாளில் காரியம் செய்வர். தற்கால அவரச உலகில் மூன்றாம் நாள் அல்லது ஐந்தாம் நாள் காரியம் செய்கின்றனர்.

## 7. ஏனைய சடங்குகள்

பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு தவிர ஏனைய சடங்குகளையும் மக்கள் கடைப்பிடிக்கின்றனர்.

### ஆவி வழிபாட்டுச் சடங்குகள்

சமயத்தின் தொடக்கம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார் டெய்லர். அகால மரணமடைந்தவாரின் ஆவிகள் அவை இறந்தபோது அடைந்த துன்பங்கள், அதனுடைய நிறைவேறாத ஆசைகள் முதலியவற்றை நிறைவேற்ற ஒருவனைப் பற்றிக் கொள்வதாக விளவங்கோடு வட்டார மக்களில் ஒரு சிலர் நம்புகின்றனர். இத்தகைய ஆவிகளின் செயல்பாடுகளால் நோய், இழப்பு, துன்பம் போன்றவை ஏற்படுவதாக நம்பி அவற்றிலிருந்து விடுபட ஆவி வழிபாட்டுச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இயற்கைக்கு மாறுபட்ட முறையில் கொலை, தற்கொலை, விபத்து போன்றவற்றால் இறந்தோரது ஆவி, அதற்கென்று விதிக்கப்பட்ட காலம் வரையில் உலகில் உலவும் என்று இன்றளவும் மக்கள் நம்புகின்றனர். இவ்வாறு உலாவிக் கொண்டிருக்கும் ஆவிகளைக் காற்று (காத்து), கருப்பு, பேய், பிசாசு, மோகினி, முனி என்னும் பெயர்கள் இட்டு மக்கள் அழைக்கின்றனர். உடலை விட்டு ஆவி தனியே பிரிந்து சென்று விடுகிறது என்ற உண்மையை ஆதி மக்கள் உணர்ந்திருந்தாலும், இறப்பிற்குப் பின் உடலுக்கும் ஆவிக்கும் பிரிக்க முடியாத அளவுக்கு நெருக்கமான தொடர்பு இருந்து வருகிறது என்று நம்பினார்கள்.

ஆவிகள் பற்றிய நம்பிக்கை இவ்விஞ்ஞான உலகத்திலும் உலகெங்கும் உலவக் காண்கிறோம். லண்டனில் பேய்கள் வாழுகின்ற வீடு என்று கருதப்படும் சில

வீடுகளை ஆராய்ச்சியாளர்கள் முற்றுகையிட்டு ஆய்வு செய்தார்கள் என்றும் எடுத்த புகைப்படங்கள் ஆவிகள், பேய்கள், பிசாசுகள் இருக்கின்றன என்பதை உறுதி செய்தன என்றும் செய்திகள் குறிப்பிடுகின்றன. முன்னாள் அமொரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஆவியுருவில் நடமாடி வருவதை முன்னாள் ஜனாதிபதிகள் ட்ருமன், ரொனால்டு ரீகன் ஆகியோரும் வெள்ளை மாளிகை அதிகாரிகளும் குறிப்பிட்டுள்ளனர். ஆவிகள் குறிப்பிட்ட சில மரத்தின் மீதும், இறந்தவர்களைப் புதைத்த இடத்திலும், காடுகளிலும் தங்கி இருப்பதாக நம்புகின்றனர். குளம், குட்டைகளிலும், ஆள் நடமாட்டம் இல்லாத சில இடங்களிலும் ஆவிகள் தங்கி இருப்பதாக விளவங்கோடு வட்டார மக்கள் நம்புகின்றனர்.

சங்க இலக்கியங்களான நற்றிணை, பதிற்றுப்பத்து போன்றவற்றில் ஆவிகள் உறையும் இடங்களான மலை, மரம், நீர் நிலைகள், பாழடைந்த இடங்கள் முதலியவை கூறப்பட்டுள்ளன. ஆவியானது பொருட்களில் வந்து உறைவதால் தமக்கு நன்மை, தீமை போன்றன ஏற்படுகின்றன என்று விளவங்கோடு வட்டார மக்கள் நம்புகின்றனர். “காட்டில் வாழும் பழங்குடி மக்கள் பேய், பிசாசு மீது நம்பிக்கையுள்ளவர்கள். இறந்தவர்களை வணங்கலும், தேவதைகளைப் பூசிப்பதும் அவர்களிடம் முக்கியமாகக் காணப்படும்.”27 குளம், குட்டையில் இருக்கும் பேய் அந்த வழியாகச் செல்லும் சிறுவர், சிறுமியர், இளம்பெண் போன்றவர்களைப் பிடித்துக் கொள்ளும் என்றும் நம்புகின்றனர். ஆகவே மருத்துவாரிடம் சென்று தாயத்து வாங்கிக் கட்டிக் கொண்டால் பேய் தங்களை அணுகாது என்று நம்புகின்றனர். ஆவி பிடித்தவர்களை வேப்பிலை, துடைப்பம், செருப்பு, குச்சி போன்றவற்றால் அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

## இயல் தொகுப்பு

“சடங்குகள் ஒரு பார்வை” என்னும் இவ்விரண்டாம் இயலிலிருந்து பெறப்பட்ட கருத்துகள் பின்வருமாறு தொகுத்து அளிக்கப்படுகின்றன.

சடங்குகள் வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளாகும். அவற்றை ஒவ்வொருவரும் ஒரு சில வரையறைகளோடு கடைப்பிடிக்கின்றனர். இயற்கை அமைப்போடும் சமூக அமைப்போடும் ஒன்றி வாழ்வதற்காக அமைக்கப்பட்ட முறைகளே சடங்குகள் ஆகும். இச்சடங்குகள் சமயச் சடங்குகள், வாழ்க்கை வட்டச் சடங்குகள் என்று இரண்டு வகையாகப் பகுக்கப்படுகின்றன.

பிறப்புச் சடங்குகள், காதணி விழாச் சடங்குகள், பூப்புனித நீராட்டுச் சடங்குகள், திருமணச் சடங்குகள், வளைகாப்புச் சடங்குகள், இறப்புச் சடங்குகள் எனப் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை வட்டச் சடங்குகள் அனைத்தும் இலக்கியத்தோடும் மக்கள் வழக்காற்றோடும் ஒப்பிட்டு இவ்வியலில் விளக்கப் பெற்றுள்ளன.

## சான்றெண் விளக்கம்

1. நன்னூல் : நூ. 9
2. த. ஆதித்தன், தகழியின் செம்மீனும் முகிலையின் தோரி மணலும் : ப. 109
3. கலைக்களஞ்சியம் : தொகுதி 4 : ப. 392
4. அ. இருதயராஜ் சே.ச., வழக்காறுகள் காட்டும் வாழ்வியல் : ப. 67
5. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் : ப. 51
6. அ. இருதயராஜ் சே.ச., வழக்காறுகள் காட்டும் வாழ்வியல் : ப. 179
7. ஆறுமுக நாவலர், இந்துமதப் பாலபாடம் : ப. 6
8. அ. இருதயராஜ் சே.ச., வழக்காறுகள் காட்டும் வாழ்வியல் : ப. 73
9. திருக்குறள் : 60
10. மறைமலையடிகள், தமிழர் மதம் : ப. 63
11. டாக்டர் வே. சரோஜா, நாட்டுப்புற வரைதல் கலை : ப. 14
12. கலைக்களஞ்சியம்: தொகுதி 4 : ப. 392
13. டாக்டர். மு. சற்குணவதி, தமிழக நாட்டுப்புறவியல் : ப. 132
14. அரு. மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் : ப. 42
15. டாக்டர். மு. சற்குணவதி, தமிழக நாட்டுப்புறவியல் : ப. 132
16. அரு. மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் : ப. 42
17. அரு. மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் : ப. 43
18. அரு. மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் : ப. 43
19. க.த. திருநாவுக்கரசு, தமிழர் நாகாரிக வரலாறு : ப. 197

20. க. கிருஷ்ணசாமி, நாட்டுப்புறப் பாடல்களில் வளமை நம்பிக்கையும் சடங்குகளும், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் : ப. 187

21. சே.ச. சேவியர் அந்தோணி, ஈர்ப்புவிசை : ப. 191-192

22. கணேச ஆசாரி, தினமணிக் கதிர், பக். 20, 29-01-1984

23. தொல்காப்பியம் : 1088

24. தொல்காப்பியம் : 1089

25. தொல்காப்பியம் : 1091

26. ஆ. திருநாகலிங்கம், சமூக அமைப்பில் திருமணங்கள், நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை : தொகுதி 2 : ப. 594

27. வி.ஐ. சுப்பிரமணியம், சில கட்டுரைகள் : தொகுதி 2 : ப. 59